Padasalai TrbTnpsc

# ஹைறாத்துல் ஜமாலியா கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி.

# 12

# வரலாறு கையேடு

## தொகுதி I (1- 4 பாடங்கள்)

MEK KJEMHSS

முனைவர். மு.புரோஸ்கான் M.Sc., M.A.,M.Ed.,M.Phil.,Ph.D
உதவித் தலைமையாசிரியர் & முதுகலை ஆசிரியர் (வரலாறு)

# ஒரு மதிப்பெண் வினாக்கள்

## பாடம்-1

சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கவில் இருந்து எந்தஆ ண்டு இந்தியா திரும்பினார்?
   **அ) 1915** ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2. இந்தியாவில் ஆங்கிலக்கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ?
   அ) 1825 **ஆ) 1835** இ) 1845 ஈ) 1855

3. மாறுபட்ட ஒன்றைத் தேர்க.
   அ) வில்லியம்ஜோன்ஸ் ஆ) சார்லஸ்வில்கின்ஸ்
   இ) மாக்ஸ்முல்லர் **ஈ) அரவிந்தகோஷ்**

4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை,அதை அடைந்தே தீருவேன்" - எனக்கூறியவர்.
   **அ) பாலகங்காதரதிலகர்** ஆ) தாதாபாய்நௌரோஜி
   இ) சுபாஷ்சந்திரபோஸ் ஈ) பாரதியார்

5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க.
   (அ) பாலகங்காதரதிலகர் - 1.இந்தியாவின் குரல்
   (ஆ) தாதாபாய்நௌரோஜி - 2.மெட்ராஸ்டைம்ஸ்
   (இ) மெக்காலே - 3.கேசரி
   (ஈ) வில்லியம்டிக்பை - 4.இந்தியக்கல்வி குறித்த குறிப்புகள்
   அ) 2,4,1,3 **ஆ) 3,1,4,2** இ) 1,3,2,4 ஈ) 4,2,3,1

6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?
   அ) ஆங்கிலக்கல்விச்சட்டம் -1843
   ஆ) அடிமைமுறைஒழிப்பு -1859
   **இ) சென்னைவாசிகள்சங்கம் -1852**
   ஈ) இண்டிகோகலகம் -1835

7. பின்வரும்அமைப்புகள்தொடங்கப்பட்ட சரியான காலவரிசையைத் தேர்க.
   (i) கிழக்கிந்தியக்கழகம் 1866 (ii) மெட்ராஸ்மகாஜன சங்கம் 1884
   (iii) சென்னைவாசிகள்சங்கம் 1852 (iv) இந்தியச்சங்கம் 1865
   அ) ii,i,iii,iv (ஆ ) ii,iii,i,iv **இ) iii,iv,i,ii** (ஈ) iii,iv,ii,i

8. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
   அ) சுபாஷ்சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள்
   **இ) ஏ.ஓ.ஹியூம்** ஈ) பாலகங்காதரதிலகர்

9. இந்தியத் தேசியக்காங்கிரஸின் முதல் தலைவர்.
   அ) சுரேந்திரநாத்பானர்ஜி ஆ) பத்ருதீன்தியாப்ஜி
   இ) ஏ.ஓ.ஹியூம் **ஈ) W.C.பானர்ஜி**

10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்"என அழைக்கப்படுபவர்.
    அ) பாலகங்காதர திலகர் ஆ) எம்.கே.காந்தி
    **இ) தாதாபாய் நௌரோஜி** ஈ) சுபாஷ்சந்திரபோஸ்

11. "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்"என்ற நூலை எழுதியவர்.
    அ) பாலகங்காதரதிலகர் ஆ) கோபாலகிருஷ்ண கோகலே

MFK.KJEMHSS

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) எம்.ஜி.ரானடே

12. **கூற்று :** ஆங்கில அரசாங்கம்தடையற்ற வாணிகம் (அ) தலையிடாக்கொள்கையைப் பின்பற்றியது.

**காரணம்(கா):** இங்கிலாந்தின் தடையற்ற வாணிபக் கொள்கையினால் இந்தியா ஈடான நன்மையைப்பெற்றது.

அ) கூற்று சரி. ஆ னால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
**இ) கூற்று சரி காரணம் தவறு.**
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

13.ஒரிஷா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை /எது ?

**கூற்று 1** :1866ம்ஆ ண்டில் 15 இலட்சம் மக்கள் ஒரிஷாவில் பட்டினியால் இறந்தனர்.

**கூற்று 2** : பஞ்ச காலத்தில் 200மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசுஏற்றுமதிசெய்தது.

**கூற்று 3** : ஒரிஷா பஞ்சமானது தாதாபாய்நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள்ஆய்வை மேற்கொள்ளத்தூண்டியது.

அ) 1,2 ஆ) 1,3 இ) இவற்றுள்எதுவுமில்லை **ஈ) இவைஅனைத்தும்**

14. **கூற்று (கூ):** தாதாபாய் நௌரோஜி இந்தியத்தேசியக்காங்கிரஸின் தலைவராக மூன்று முறைதேர்வு செய்யப்பட்டார்.

**காரண ம்(கா):** 1905ஆம்ஆண்டு வரையில் இந்திய விடுதலை இயக்கம் அரசியலமைப்பு -வாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது.

**அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## பாடம்-2

### சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸின்அடுத்தத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிரதேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது ?

அ) அரவிந்தகோஷ் ஆ) தாதாபாய்நௌரோஜி
இ) பெரோஸ்ஷாமேத்தா **ஈ) லாலாலஜ்பதிராய்**

2. **பின்வரும் கூற்றுகளை காண்க.**

(i) 1905 இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப்பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.
(ii) 1905 இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத்பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்புவிடுத்தார்.
(iii) 1905 ஆகஸ்ட் 7 இல் நடைபெற்ற டவுன்ஹால் கூட்டத்தில் சுதேசிஇயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேற்கண்ட கூற்றுகளில் எது /எவை சரியானவை.

அ) (i) மட்டும் ஆ) (i) மற்றும் (iii) மட்டும்
இ) (i) மற்றும் (ii) மட்டும் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

3. **பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க.**

(அ) இந்தியப்பத்திரிகைச்சட்டம்,1910 - 1. சுயஆ ட்சி.
(ஆ) விடிவெள்ளிக்கழகம் - 2. சார்ந்திருக்கும்நிலைக்கு எதிரான புரட்சி.

(இ) சுயராஜ்யம் - 3. தேசியஅளவிலான செயல்பாடுகளை நசுக்கியது.
(ஈ) சுதேசி - 4. கல்விக்கான தேசியக்கழகம்
அ) 3 1 4 2 ஆ )1 2 3 4 **இ) 3 4 1 2** ஈ) 1 2 4 3

4.பின்வருவனவற்றுள்எது ஒன்று சரியாகப்பொருந்தியுள்ளது ?
**அ) பங்கிம்சந்திரசாட்டர்ஜி - ஆனந்தமடம்**
ஆ) ஜி.சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்
இ) மிண்டோபிரபு - பல்கலைக்கழகச்சட்டம்,1904
ஈ) தீவிரதேசியவாதமையம் - சென்னை

5.கல்கத்தாவில்அனுசிலன்சமிதியைநிறுவியவர்.
அ) புலின்பஹாரிதாஸ் ஆ )ஹேமச்சந்திரகானுங்கோ
**இ) ஜட்டின்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர்குமார்கோஷ்**
ஈ) குதிரம்போஷ் மற்றும் பிரடீபுல்லாசாக்கி

6.**கூற்று :** 1905 அக்டோபர்16 துக்கநாளாக அனுசரிக்கப்பட்டது.
**காரணம்:** மேற்படிநாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது.
**அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

7. **கூற்று :** வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
**காரணம்:** இந்தியக்கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையை அவர் எதிர்த்தார்.
**அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

8.சுப்ரமணியபாரதி குறித்த பின்வரும் எந்தகூற்று தவறானது.
அ) பாரதி சுதேசமித்திரன் இதழின்துணை ஆசிரியராக இருந்தார்.
ஆ) பாரதி திலகரின் புதியகட்சியின் சிந்தாந்தங்கள் என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.
**இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமிவிவேகானந்தராவார்.**
ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி"என்ற இதழின்ஆசிரியராக இருந்தார்.

## பாடம்-3

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. தென்னிந்தியாவில் சுயாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது ?
அ) திலகர் **ஆ) அன்னிபெசன்ட்** இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

2. பின்வருவனவற்றுள்அன்னிபெசன்ட் பற்றிய சரியான கூற்று எது ?
1. கர்னல் எச்.எஸ்.ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் தலைவராக அன்னிபெசன்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2.1914இல்அவர்காமன்வீல்என்றவாராந்திரஇதழைதொடங்கினார்.
3.1915ஆ ம்ஆ ண் டு இந்தியாஎவ்வாறு விடுதலைப்போரைமுன்னெடுத்துச்சென்றது என்றதலைப்பிலான புத்தகத்தைபதிப்பித்தார்.
அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 1 மற்றும் 3 **ஈ) 1,2 மற்றும் 3**

3. **கூற்று :** ஜின்னாவை இந்து -முஸ்லிம் ஒற்றுமையின்தூதர் என்று சரோஜினி அம்மையார்அழைத்தார்.
**காரணம்:** லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச்சிற்பி ஜின்னா ஆவார்.

MFK KJEMHSS

அ) கூற்று சரி. காரணம்கூற்றிற்கான விளக்கமல்ல.
**ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கம்.**
இ) கூற்று தவறு. காரணம் சரி
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

4. பனாரஸ் இந்துப்பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது ?
அ) மகாத்மாகாந்தி **ஆ) மதன்மோகன் மாளவியா** இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

5. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்.
அ) முஸ்லிம்லீக் எழுச்சி.
ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லிம்லீக் தற்காலிக இணைப்பு.
**இ) காங்கிரஸ் மற்றும் முஸ்லிம்லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை ஏற்றுக்கொண்டது.**
ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லிம்லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறைபோக்கு.

6. பின்வருவனவற்றை கீழேகொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள்உதவியுடன் பொருத்துக.
(அ) கதார்கட்சி - i.1916
(ஆ) நியூஇந்தியா - ii.1913
(இ) சுயாட்சிஇயக்கம் - iii.1909
(ஈ) மின்டோ-மார்லிசீர்திருத்தம் - iv.1915
**அ) ii,iv,i,iii** ஆ) iv,i,ii,iii இ) i,iv,iii,ii ஈ)ii,iii,iv,i

7. "இந்தியக்கிளர்ச்சி"என்றபுத்தகத்தின்ஆ சிரியர்.
அ) லாலாலஜபதிராய் **ஆ) லேவண்டைன் சிரோலி** இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

8. கதார்கட்சி யாரால் நிறுவப்பட்டது ?
அ) லாலாலஜபதிராய் ஆ) ஏ.சி.மஜும்தார் **இ) லாலா ஹர்தயாள்** ஈ) சங்கர்லால்பாங்கர்

9. அகிலஇந்தியதொழிற்சங்ககாங்கிரஸின்முதல்தலைவர்யார்?
அ) பி.பி.வாடியா ஆ) ஜவஹர்லால்நேரு **இ) லாலாலஜ்பதிராய்** ஈ) சி.ஆ ர்.தாஸ்

## பாடம்-4

**சரியான விடையைத்தேர்ந்தெடு.**

1. காந்தியடிகளின் அரசியல்குரு யார்?
அ) திலகர் **ஆ) கோகலே** இ) W.C.பானர்ஜி ஈ) எம்.ஜி.ரானடே

2. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய காந்தி தனது வெற்றிகரமான முதலாவது சத்யாகிரகப்போராட்டத்தைதொடங்கியஇடம்.
அ) கேடா ஆ) தண்டி **இ) சம்பரான்** ஈ) பர்தோலி

3. சைமன்கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது ?
அ) கமிஷன்அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன்அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.
ஆ) சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை.
**இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.**
ஈ) அது முழுச்சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

4. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது ?
**அ) டிசம்பர்31,1929** ஆ) மார்ச்12,1930 இ) ஜனவரி 26,1930 ஈ) ஜனவரி 26,1931

MFK,KJEMHSS

5. 1923 இல் மோதிலால்நேரு மற்றும் சி.ஆ ர்.தாஸ்-ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன ?
**அ)சுயராஜ்யக்கட்சி** ஆ) கதார்கட்சி இ)சுதந்திராக்கட்சி ஈ)கம்யூனிஸ்ட்கட்சி

6. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத்தேர்வு செய்க.
(அ)நாமசூத்ராஇயக்கம் -1.வடமேற்கு இந்தியா
(ஆ )ஆ திதர்மஇயக்கம் -2.தென்னிந்தியா
(இ)சத்யசோதக்இயக்கம் -3.கிழக்கிந்தியா
(ஈ)திராவிடஇயக்கம் -4.மேற்கு இந்தியா
**அ) 3 1 4 2** ஆ) 2 1 4 3 இ) 1 2 3 4 ஈ) 3 4 1 2

7. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளை காலவரிசைப்படுத்துக.
(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ்படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள்மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில்அடைக்க ரௌலட்சட்டம் கொண்டு வரப்பட்டது.
(3) சௌரிசௌரா வன்முறைச்சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக்கொள்ள வழிவகுத்தது.
(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக்கொண் டது.
**அ) 2,1,4,3** ஆ ) 1,3,2,4 இ) 2,4,1,3 ஈ) 3,2,4,1

8. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?
**அ) பஞ்சாப்துணை ஆளுநர் - 1.ரெஜினால்டு டையர்**
ஆ) தலித்-பகுஜன்இயக்கம் - 2.டாக்டர்.அம்பேத்கர்
இ) சுயமரியாதைஇயக்கம் - 3.பெரியார்ஈ.வெ.ரா.
ஈ) சத்யாகிரகசபை - 4.ரௌலட்சட்டம்

9. பின்வரும் நிகழ்வுகளை சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
(i) கேடாசத்யாகிரகம் 1918 (ii) சம்பரான்இயக்கம் 1917
(iii) பிராமணரல்லாதோர் இயக்கம் 1916 (iv) வேதாரண்யம் உப்புசத்யாகிரகம் 1930
அ) ii,iii,i,iv **ஆ) iii,ii,i,iv** இ) ii,i,iv,iii ஈ) ii,i,iii,iv

10. பின்வருவனவற்றுள் எது /எவை சரியானவை அல்ல.
(i) காந்தியடிகள்அகமதாபாத்தில் சபர்மதி ஆஸ்ரமத்தை நிறுவினார்.
(ii) வல்லபாய்படேல் ஒரு வழக்கறிஞர்.
(iii) சைமன்குழுவினை முஸ்லீம்லீக் வரவேற்றது.
(iv) இரண்டாவது வட்டமேஜைமாநாட்டில் காந்தியடிகள்கலந்து கொண்டார்.
அ) i ஆ) i மற்றும் iv இ) ii மற்றும் iii **ஈ) iii மட்டும்**

11. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.
(அ) பள்ளி மற்றும் கல்லூரிகளை புறக்கணித்தல்.
(ஆ )அரசு வழங்கிய பட்டங்களை திருப்பியளித்தல்.
(இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்.
(ஈ)அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்.
**அ) அ மற்றும் ஆ** ஆ) ஆ மற்றும் இ இ) அ மற்றும் ஈ ஈ) இ மற்றும் ஈ

12.**கூற்று :** பி.ஆ ர்.அம்பேத்கர் மகத்சத்யாகிரகத்தைத் தொடங்கினார்.
**காரணம்:** அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.

MHK, KJEMHSS

அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
**ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.**
இ)கூற்று காரணம் இரண்டும் சரி. ஈ)கூற்று காரணம் இரண்டும் தவறு.

13.**கூற்று :** 1919 இல் இந்தியக்கவுன்சில் சட்டம் மற்றும் ரௌலட்சட்டம் நிறைவேற்றப்பட்டது.
**காரணம்:** இது மிதவாதிகளை அரவணைத்து தீவிரவாதிகளை தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.
**அ)கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
ஆ)கூற்று சரி மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ)கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

14. கீழேகுறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்யக்கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர்.
**அ) ராஜாஜி** ஆ) சித்தரஞ்சன்தாஸ் இ) மோதிலால்நேரு (ஈ) சத்யமூர்த்தி

15.காந்தியடிகளின்தண்டியாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு.
**அ) ஏப்ரல் 6,1930** ஆ) மார்ச் 6,1930 இ) ஏப்ரல் 4,1939 ஈ) மார்ச் 4,1930

## இரண்டு மதிப்பெண் வினாவிடைகள்

**1. தேசியம்**
1. தேசியம் என்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல்.
2. தனது நாட்டை ஏனைய நாடுகளைவிட உயர்வான இடத்தில் வைத்துப் போற்றுதல்.
3.தனது நாட்டின் பண்பாடு, விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தல்.

**2. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகள்**
1. நிலத்தை விற்பனைப் பொருளாக்கியது - நிலத்திற்கு விலை நிர்ணயிக்கப்பட்டது.
2. இந்தியாவில் வேளாண்மையை வணிக மயமாக்கியது - உணவு உற்பத்தி தடைபட்டது.
3. நிலவரி செலுத்தாமல் இருந்தால் நிலங்களை பறிமுதல் செய்து ஏலம்விட்டனர்.
4. சந்தைக்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்ய வற்புறுத்தப்பட்டனர்.

**3. அவுரி புரட்சி**
1. இந்தியக் குத்தகை விவசாயிகளை அவுரியை மட்டுமே பயிரிடக் கட்டாயப்படுத்தினர்.
2. பண்ணையாளர் சந்தை விலையைவிடக் குறைவான விலைக்கு அவுரியை வாங்கினர்.
3. புது ஒப்பந்தங்கள் போட மறுத்து விவசாயிகள் 1859 - 60 இல் புரட்சியில் ஈடுபட்டனர்.

**4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவம்**
1.ஐரோப்பியர்களை இந்திய நீதிபதிகள் விசாரிப்பதற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பின.
2. 1883 இல் இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக இந்தியாவில் கிளர்ச்சிகள் நடந்தன.
3. தேசிய அளவில் ஒரு அரசியல்சார் அமைப்பை உருவாக்க வேண்டுமென உணர்ந்தனர்.
4. ஒருவித தேசிய உணர்வு தோன்றி இறுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் உதயமானது.

**5. நவீன கல்வியில் சமயப் பரப்புக் குழுக்களின் பங்கு :**
1. இந்துமத பலகடவுள் கோட்பாடு, சாதிய ஏற்ற தாழ்வுகளை கிறிஸ்தவர்கள் சாடினர்.
2. நவீன, மதச்சார்பற்ற கல்வியின் மூலமாக கிறிஸ்தவத்தைப் போதிக்க முயன்றனர்.
3. கல்வி உரிமை மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் கல்வி பயிலும் வாய்ப்பை வழங்கின.
4. பல்வேறு சமூக, மத சீர்திருத்த இயங்கங்கள் தோன்ற வழிவகை செய்தது.

MFK. KJEMHSS

**6. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள்:**

1.ஆங்கிலேயப் பகுதிகள் மகாராணியாரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்ற வேண்டும்.
2. இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும்.
3. இரயத்துவாரி, ஜமீன்தாரி முறைகளை ஒழித்து விவசாயிகளை விடுவிக்க வேண்டும்.

**7. இந்தியத் தேசியக் காங்கிரஸுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியல் :**

1. தாதாபாய் நௌரோஜி நிறுவிய இந்திய சங்கம் - 1865
2. தாதாபாய் நௌரோஜி நிறுவிய கிழக்கிந்தியக் கழகம் - 1866
3. சென்னை வாசிகள் சங்கம் - 1852 4. சென்னை மகாஜன சங்கம் - 1884

**8. தொடக்க கால முக்கிய தேசியவாதிகள் :**

1. A. O. ஹியூம், W. C. பானர்ஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி.
2. கோபால கிருஷ்ண கோகலே, பக்ருதீன் தியாப்ஜி, பெரோஸ்ஷா மேத்தா.
3. லாலா லஜபதி ராய், பிபின் சந்திர பால், பால கங்காதர திலகர்.

**9. மிதவாதிகளின் - இறைஞ்சுதல் கொள்கை :**

1. மிதவாதிகள் ஆங்கிலேயரிடம் கடைபிடித்த கவனமான அணுகுமுறை.
2. தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிட ஆங்கிலேயரிடம் மன்றாடுதல்.
3. அமைதியான வழியில் ஆங்கிலேயரிடம் மனுக்களைச் சமர்ப்பித்தல்.

**10. மகாதேவ் கோவிந்த ரானடே விளக்கும் சுதேசிக் கொள்கை :**

1. மகாதேவ் கோவிந்த ரானடே 1872 இல் பூனாவில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.
2. சுதேசி என்பதன் பொருள் ஒருவரது நாட்டிற்குச் சொந்தமான என விளக்கினார்.
3. ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்றார்.

**11. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்கள் :**

1. பஞ்சாப்பில் - லாலா லஜபதி ராய்.
2. கல்கத்தாவில் - பிபின் சந்திர பால்.
3. பம்பாயில் - பால கங்காதர திலகர்.

**12. தீவிர தேசியவாதம் 1908 க்கு பின்னர் குறைந்தது - காரணம் :**

1.1907 ஆம் ஆண்டு சூரதில் நடைபெற்ற மாநாட்டில் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது.
2. சுதேசி இயக்கத் தலைவர்கள் சமூகத்தின் பெரும்பகுதி மக்களை ஊடுருவத் தவறினர்.
3. இந்துமத நம்பிக்கைகளால் முலாம் பூசப்பட்ட தேசப்பற்றை முஸ்லிம்கள் ஏற்கவில்லை.

**13. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் :**

1.1904 - பல்கலைக் கழகச் சட்டம் 2. 1904 - அலுவலக ரகசியச் சட்டத்தில் திருத்தம்.
3. 1907 - பொதுக் கூட்டங்கள் சட்டம் 4. 1908 - வெடி மருந்துச் சட்டம்
5. 1908 - தூண்டுதல் குற்றச் சட்டம் 6. 1910 - இந்திய பத்திரிகைச் சட்டம்

**14. 1903 - 1914 ஆகிய கால கட்டங்களில் தேசிய இயக்கம் வளர்ந்து வருவதை கட்டுப்படுத்த ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் :**

1.1903 - கர்சன் பிரபு குற்ற உளவுத் துறையை (CID) உருவாக்கினார்.
2. 1908 - பத்திரிக்கைகள் சட்டம் மற்றும் வெடிபொருட்கள் சட்டம்.
3. 1910 - இந்திய பத்திரிக்கைகள் சட்டம்.
4. 1911 - தேசதுரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம்.

MFK, KJEMHSS

5. 1914 - வெளிநாட்டினர் அவசரச் சட்டம்.

**15. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி :**
1. முதல் உலகப் போரில் தோல்விடைந்த துருக்கி தண்டிக்கப்பட்டது.
2. செவ்ரேஸ் உடன்படிக்கை துருக்கி சுல்தானின் நிலையை தாழ்த்தியது.
3. சிரியாவும், லெபனானும் பிரான்ஸின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.
4. பாலஸ்தீனமும் ஜோர்டனும் பிரிட்டிஷார் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.

**16. அன்னி பெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்கள் :**
1. வாராந்திரப் பத்திரிக்கை - காமன் வீல் (1914).
2. புத்தகம் - இந்தியா எவ்வாறு விடுதலைப் போரை முன்னெடுத்துச் சென்றது (1915).
3. தினசரிப் பத்திரிக்கை - நியு இந்தியா (1915).

**17. 1915 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் :**
1. முதல் உலகப்போரின் போது அவசர கிரிமினல் சட்டமாக கொண்டுவரப்பட்டது.
2. தேசியவாத மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இயற்றப்பட்டது.
3. சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இச்சட்டம் அனுமதித்தது.
4. இச்சட்டம், இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது.

**18. வேல்ஸ் இளவரசர் இந்தியாவின் வருகை அமைந்திருந்த விதம் :**
1. 1921 இல் வேல்ஸ் இளவரசரின் வருகையை இந்திய மக்கள் புறக்கணித்தனர்.
2. நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
3. வேல்ஸ் இளவரசரின் வருகையால் ஒத்துழையாமை இயக்கம் மேலும் வலுவடைந்தது.

**19. காந்தியடிகளின் சம்பரான் சத்யாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள்**
1. ராஜேந்திர பிரசாத் மற்றும் மஜாருல்ஹக்
2.ஆச்சார்ய கிருபிளானி மற்றும் மஹாதேவ தேசாய்
3. உள்ளூர் தலைவர்களுடன் சேர்ந்து காந்தியடிகள் சம்பரான் சத்யாகிரகம் நடத்தினார்.

**20. இந்திய பணியாளர் சங்கம் தோற்றுவிக்கப்படக் காரணம் :**
1.இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்குவதற்காக 1905 இல் நிறுவப்பட்டது.
2.பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக செயலாற்றுதல்.
3.நிவாரணப் பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக் கடமைகளில் ஈடுபடுதல்.

**21. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா :**
1. அம்பேத்கர் - பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை என்ற அமைப்பை நிறுவினார்.
2. தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு என்று அழைக்கப்பட்டது.
3. அம்பேத்கர் மூக் நாயக் என்ற பத்திரிக்கையை தொடங்கி நடத்தி வந்தார்.
4. தீண்டத்தகாதவர்கள் மீது விதிக்கப்பட்ட இடர்பாடுகளைக் களைய பாடுபட்டார்.

**22. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் எதிர்க்கப்படக் காரணம் :**
1. காலனி ஆதிக்க அரசு இயற்றிய அடக்குமுறை சட்டங்களில் இதுவும் ஒன்று.
2. எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்கலாம் என்றது.
3.1919 இல் மத்திய சட்டப் பேரவை உறுப்பினர்களின் எதிர்ப்பை மீறி நிறைவேற்றியது.

**23. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் :**
1. பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் - காந்தியடிகள் இருவருக்கும் இடையே ஏற்பட்டது.
2. தீண்டத்தகாத மக்களின் தனித்தொகுதிகள் ஒதுக்கீடுக்கு உத்தரவாதம் அளித்தது.
3. இடஒதுக்கீடு தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன.

4. ஏரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்த காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றியது.

**24. பி.ஆர். அம்பேத்கர் தோற்றுவித்த அரசியல் கட்சியின் பெயர் :**

1. டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் இரண்டு அரசியல் கட்சிகளை ஆரம்பித்தார்.
2. 1937 ஆம் ஆண்டு சுதந்திர தொழிலாளர் கட்சியை தொடங்கினார்.
3. 1942 ஆம் ஆண்டு ஷெட்யூல்டு வகுப்பு கூட்டமைப்பை தொடங்கினார்.

**25. காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை :**

1. காந்தி விடுதலையான பிறகு சத்யாகிரகப் பிரச்சாரத்தைக் கைவிட உறுதி ஏற்றார்.
2. சிறையில் அடைக்கப்பட்ட இந்தியர்களை விடுதலை செய்ய இர்வின் சம்மதித்தார்.
3. 1931 காந்தி - இர்வின் ஒப்பந்தம் சட்டமறுப்பு இயக்கத்தின் முடிவைக் குறிக்கிறது.

## மூன்று மதிப்பெண் வினா விடைகள்

**1. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" :**

1. 1835 இல் மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" வெளியானது.
2. ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என வாதிட்டார்.
3. இந்திய மக்கள் ரத்தத்திலும் நிறத்திலும் மட்டும் இந்தியர்களாக இருக்க வேண்டும்.
4. விருப்பத்தில், கருத்தில், ஒழுக்கத்தில், அறிவில் ஆங்கிலேயராக இருக்க வேண்டும்.

**2. 1853 இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகை :**

1. H.D. செய்மோர் இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவராக இருந்தார்.
2. சென்னைவாசிகள் சங்கத்தின் மனுவை விசாரிக்க 1853 இல் சென்னை வந்தார்.
3. குண்டூர், கடலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களை பார்வையிட்டார்.
4. 1853 - பட்டயச் சட்டம், இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி தொடர அனுமதி அளித்தது.

**3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கு :**

1. தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள் போன்ற சிந்தனைகளைப் பரப்பின.
2. அரசியலை விமர்சனம் செய்தன. நாட்டினைப் பாதிக்கும் பிரச்சனைகளை பேசின.
3. மக்கள் நலன் சார்ந்த பொதுவான செயல்களை மக்களுக்குக் கற்றுத்தர முயன்றன.
4. தேசிய, பிராந்திய மொழிப் பத்திரிகைகள் மக்களிடம் தேசிய உணர்வை விதைத்தன.

**4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை ஏற்படுத்தப்பட்ட வழிகள் :**

1. தொழிற்புரட்சியால் வேலை இழந்த இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக சென்றனர்.
2. 1833 மற்றும் 1843 இல் ஏற்பட்ட பஞ்சங்கள் இந்தியர்களை கூலிகளாக மாற்றியது.
3. 1843 இல் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால் ஒப்பந்தக் கூலிமுறை ஊக்கம் பெற்றது.
4. வறட்சி மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒப்பந்தக் கூலிகளாக மாறினர்.

**5. 1884 மே மாதத்தில் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்கள் :**

சுப்ரமணியம் , விஜயராகவாச்சாரி , அனந்தாசார்லு , ரங்கையா , பாலாஜிராவ் சேலம் ராமசாமி

**6. தொடக்க காலத்தில் இலங்கைக்கு தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்பட்ட முறை :**

1. 1815 இல் சிலோன் ஆளுநர் இலங்கைக்கு "கூலிகளை" அனுப்பி வைக்கக் கோரினார்.
2. 1837 இல் தமிழ்நாட்டில் இருந்து சுமார் 10,000 பேர் கூலிகளாக இலங்கை சென்றனர்.

MK, KJEMHSS

3. 1846 இல் 80,000 பேரும், 1855 இல் 1,28,000 பேரும் என தமிழர்கள் குடிபெயர்ந்தனர்.
4. 1877 இல் சுமார் 3,80,000 தமிழ் கூலித் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

**7. இந்திய நிர்வாகச் செலவின விவரங்கள் :**

1. லண்டனில் வாழும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்படும் பங்கு.
2. இருப்புப்பாதைத் துறையில் முதலீடு செய்தவர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி.
3. பணி நிறைவு செய்த அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம்.
4. போர்களுக்காக இங்கிலாந்திடம் இருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி.

**8. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் :**

1. காங்கிரசின் தலைவராக மிதவாதிகள் ராஷ்பிகாரி கோஷ் பெயரை முன்மொழிந்தனர்.
2. காங்கிரசின் தலைவராக தீவிரவாதிகள் லாலா லஜபதி ராய் பெயரை முன்மொழிந்தனர்.
3. இயக்கத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க லாலா லஜபதி ராய் போட்டியிட மறுத்தார்.
4. மிதவாதிகள் கல்கத்தா தீர்மானங்களை நீக்கக் கோரியதை தீவிரவாதிகள் எதிர்த்தனர்.

**9. சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனிநபர் வன்முறைகளுக்கான காரணங்கள் :**

1. அந்நிய அடக்குமுறை ஆட்சியின் கீழ் இளைஞர்கள் பொறுமை இழந்து காணப்பட்டனர்.
2. இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே ஏற்றுக் கொண்டனர்.
3. இளைஞர்களுக்குத் தலைமையேற்று போராட்டம் நடத்த தீவிர தேசியவாதிகள் தவறினர்.
4. புரட்சிகளே இந்திய ஆண்மைத் தன்மையை மீட்டெடுக்கும் குறியீடு என நம்பினர்.

**10. பெருவாரியான மக்களை ஒன்றுதிரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் :**

1. உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல். அறநெறிகளைக் கற்றுத் தருதல்.
2. பஞ்சங்கள் ஏற்பட்ட போதும் நோய்களின் தாக்கத்தின் போதும் சேவை புரிதல்.
3. விழாக் காலங்களின் போது சுதேசி செய்திகளை மக்களிடம் பரப்புரை செய்தல்.
4. உள்ளூர் அளவில் பள்ளிகளையும் நடுவர் நீதிமன்றங்களையும் உருவாக்குதல்.

**11. 1908 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**

1. வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.
2. கோரல் நூற்பாலைத் தொழிலாளர்கள் 1908 மார்ச்சில் வேலைநிறுத்தம் செய்தனர்.
3. இதை முறியடிக்க தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்த அரசு தடை விதித்தது.
4. ஆலை முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை ஏற்க முன்வந்தனர்.

**12. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் :**

1. அரவிந்த கோஷ், பரீந்தர்குமார் கோஷ் உட்பட மேலும் 35 பேர் கைது செய்யப்பட்டனர்.
2. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் புரட்சியாளர்கள் சார்பில் சி.ஆர். தாஸ் வாதாடினார்.
3. போதிய ஆதாரம் இல்லாததால் அரவிந்த கோஷ் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
4. பலர் நாடு கடத்தப்பட்டனர். மக்கள் முன்னால் இவர்கள் கதாநாயகர்களாக மாறினர்.

**13. பிபின் சந்திரபாலின் விடுதலை தினத்தை திருநெல்வேலியில் சுயராஜ்ய தினமாக சுதேசி இயக்கத் தலைவர்கள் கொண்டாட திட்டமிட்டதின் விளைவு :**

1. வ.உ.சி. மற்றும் சுப்ரமணிய சிவா தேச துரோகக் குற்றத்தில் கைது செய்யப்பட்டனர்.
2. திருநெல்வேலியில் நகராட்சிக் கட்டிடமும் காவல் நிலையமும் தீ வைக்கப்பட்டன

MFK, KJEMHSS

3. கடையடைப்பு நடந்தினர். தொழிலாளர்கள் நூற்பாலையைவிட்டு வெளியேறினர்.
4.கலவரத்தில் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நால்வர் கொல்லப்பட்டனர்.

**14. வ. உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் :**

1.ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.
2.1906 இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைப் ( ளூளுளோ ) பதிவு செய்தார்.
3. வ.உ.சி. , S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
4. 1907 இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினார்.

**15. கலெக்டர் ஆஷ், வாஞ்சிநாதனால் கொல்லப்படக் காரணம் :**

1. தூத்துக்குடியில் சுதேசி இயக்கத்தை ஒடுக்க தலைவர்கள் கைது செய்யப்பட்டது.
2. திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குவதற்காக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது.
3. பாரதமாதா என்ற புரட்சிகரக் குழுவில் வாஞ்சிநாதன் ஒரு உறுப்பினராக இருந்தது.
4. ஐரோப்பிய அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் சுயராஜ்ஜியம் அடைய விரும்பியது.

**16. இரு வேறு சுயாட்சி இயக்கங்களின் நோக்கங்கள் :**

1. 1916 இல் திலகர், அன்னி பெசண்ட் இரு தன்னாட்சி இயக்கங்களை தொடங்கினர்.
2. அவை இரண்டு நோக்கங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டு இருந்தன.
3. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
4. தாய்நாடு பற்றிய பெருமை உணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது.

**17. கதர் இயக்கம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கருதப்படக் காரணங்கள் :**

1. கோமகடமரு என்ற கப்பல் இந்தியக் குடியேறிகளுடன் கனடாவில் இருந்து திரும்பியது.
2. கப்பல் இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் மோதல் ஏற்பட்டது.
3. கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர்.
4. இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

**18. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் :**

1. துருக்கியின் சுல்தான் கலீபாவாக இடையூறின்றித் தொடர வேண்டும்.
2. இசுலாமியப் புனிதத் தலங்கள் சுல்தானின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்க வேண்டும்.
3. சுல்தானிடம் போதுமானப் பகுதிகளை வழங்கி இசுலாமிய மதத்தைப் பாதுகாத்தல்.
4. அராபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம் ஆகியன அவரது இறையாண்மையில் விடுதல்.

**19. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் :**

1. தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்படுவதை மதராஸ் தொழிற்சங்கம் எதிர்த்தது.
2. மதராஸ் தொழிற்சங்கத்தின் தாக்கம் நாட்டின் இதர பகுதிகளுக்குப் பரவியது.
3. இந்த காலகட்டத்தில் இந்தியாவில் பல தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.
4. தொழிற்சங்கம் சார்ந்த கொள்கைகள் போராட்டத்துக்கு ஒரு ஆயுதமாக இருந்தன.

**20. ஜாலியன் வாலாபாக் படுகொலை :**

1. 1919 ஏப்ரல் 13 இல், மிகக் கொடுமையான அரசியல் குற்றங்கள் இழைக்கப்பட்டன.
2. ஜாலியன் வாலாபாக் பகுதியில் 2000 க்கும் அதிகமான மக்கள் குழுமியிருந்தனர்.
3. மக்களை குறிவைத்து குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார்.
4. 379 பேர் இறந்ததாக அரசு கூறியது. ரவீந்திரநாத் தாகூர் தனது பட்டத்தை துறந்தார்.

**21. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை :**

1. 1919 இந்திய கவுன்சில் சட்டம் மாகாணங்களில் இரட்டையாட்சியை கொண்டுவந்தது.
2. மாகாண அரசுகளுக்கு நிர்வாகத்தில் அதிக அளவுப் பொறுப்புகள் வழங்கப்பட்டது.
3. சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற முக்கிய துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டது.
4. சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற துறைகள் இந்தியர்களுக்கு மாற்றப்பட்டது.

**22. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் :**

1. பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் - காந்தியடிகள் இருவருக்கும் இடையே ஏற்பட்டது.
2. தீண்டத்தகாத மக்களின் தனித்தொகுதிகள் ஒதுக்கீடுக்கு உத்தரவாதம் அளித்தது.
3. இடஒதுக்கீடு தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன.
4. எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்த காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றியது.

**23. பிராமணரல்லாத இயக்க தலைவர்கள் காலனி அரசாங்கத்தை கையாள்வதில் தொடக்க கால தேசியவாதிகள் கடைப்பிடித்த அதே யுக்தியினை கையாண்டனர் :**

1. காலனிய அரசு மற்றும் கிறிஸ்துவர்கள் தொடங்கிய கல்வி நிலையங்களை ஆதரித்தது.
2. மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி தங்களுக்கு முன்னுரிமை கோரியது.
3. புதிய சாதி அமைப்புக்களைத் தொடங்கி தங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு உழைத்தது.
4. ஆங்கிலேயர்களிடம் மானியம் பெற்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெற உதவியது.

**24. மாற்றத்தை விரும்புவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக .**

**மாற்றத்தை விரும்புவர்கள் :**

1. சுயராஜ்யா கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.
2. தீவிர அரசியலில் ஈடுபடவும், சட்டப் பேரவைகளை முடக்கவும் விரும்பினர்.

**மாற்றத்தை விரும்பாதவர்கள் :**

1. தேர்தல் அரசியல் தேசியவாதிகளின் கவனத்தைத் திசை திருப்பும் என்றனர்.
2. நூல் நூற்பது, தீண்டாமை ஒழிப்பு போன்ற காந்தியப் பணிகளை செய்தனர்.

**25. பிரதம அமைச்சர் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கை :**

1. 1932 ஆகஸ்டில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டோனால்டின் அறிக்கை வெளியானது.
2. காந்தியடிகள் - அம்பேத்கர் இடையே தனித்தொகுதிகள் குறித்து விவாதம் நடந்தது.
3. பிரிட்டிஷ் பிரதமர் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும் என முடிவு எட்டப்படவில்லை.
4. இடஒதுக்கீட்டுடன் கூடிய தனித் தொகுதிகளை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொண்டது.

**26. மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவின் தோல்விக்கு பிறகு காங்கிரஸ் தடை செய்யப்படக் காரணம் :**

1. 1932 இல் சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் கையில் எடுக்க காங்கிரஸ் தீர்மானித்தது.
2. விவசாயிகளும் தொழிலாளர்களும் மற்றும் ஏனையோரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
3. ஜவஹர்லால் நேரு, காந்தியடிகள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் கைது செய்யப்பட்டனர்.
4. தேசியவாத பிரசுரங்கள் சட்டத்துக்கு எதிரானது என்று அறிவித்து பறிமுதல் செய்தனர்.

MFK KJEMESS

## ஐந்து மதிப்பெண் வினா விடைகள்

**1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர், அது இந்தியச் சமூகத்தை சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்.**

**இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கம் :**

1. நடுத்தர வர்க்கத்தினர் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிய மறுத்தனர்.
2. தங்களது விருப்பங்கள் நிறைவேற சுதந்திர இந்தியா வேண்டுமென உணர்ந்தனர்.
3. ஏனைய மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தெடுப்பதில் சிறப்பானப் பங்காற்றினர்.
4. தேசிய அளவில் பல அமைப்புகளில் இணைந்து நாட்டு மக்களை ஒன்று திரட்டினர்.

**இந்தியச் சமூகத்தை சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்ததில் மேற்கத்தியக் கல்வியின் பங்கு :**

1. பிரம்ம சமாஜம், அலிகார் இயக்கம் போன்ற சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.
2. ஆரிய சமாஜம், தியோபந்த் இயக்கம் போன்ற மீட்பு இயக்கங்கள் நிறுவப்பட்டன.
3. சீர்திருத்தவாதிகளின் மீள்சிந்தனை விளைவாக இந்திய தேசிய உணர்வு உதயமானது.
4. சதி வழக்கம், பெண்சிசுக் கொலை, குழந்தைத் திருமணம் ஆகியன ஒழிக்கப்பட்டது.
5. விதவை மறுமணம், பெண்கல்வி, ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது.

**2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகள் :**

1. இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர்.
2. வறட்சி, பஞ்சம் ஏற்பட்ட காலங்களிலும் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டனர்.
3. புதிய நிலவருவாய் முறைகள் நிலங்கள விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டன.
4. வேளாண்மை வணிக மயமாக மாறியதால் உணவு உற்பத்தி செய்வது குறைந்தது.
5. சந்தைக்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்யுமாறு கட்டாயப்படுத்தினர்.
6. நிலவரி / குத்தகை செலுத்தாமல் இருந்தால் நிலங்களைப் பறிமுதல் செய்தனர்.
7. ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
8. ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.
9. ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையில் மக்கள் பல நாடுகளுக்கு குடிபெயர்ந்தனர்.
10. இந்தியாவில் தொழில்கள் நீக்கம் செய்யப்பட்டதால் மக்கள் பலர் வேலை இழந்தனர்.

**3. இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குக் காரணமான பிரிட்டிஷாரின் அடக்குமுறை கொள்கைகள் :**

1. 1870 இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு '124 ஏ' அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டம்.
2. 1878 இல் பத்திரிக்கைகளைத் தணிக்கைக்கு உட்படுத்திய பிராந்திய மொழிச் சட்டம்.
3. இங்கிலாந்து பருத்தியிழை துணிகளின் மீதான சுங்கவரி பெருமளவு குறைக்கப்பட்டது.
4. இந்தியாவின் பருத்தியிழை துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டது.
5. ரிப்பன் பிரபு ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இல்பர்ட் மசோதாவில் திருத்தம் செய்தனர்.

**இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குக் காரணமான பிரிட்டிஷாரின் இனவெறிக் கொள்கைகள் :**

1. ஆங்கிலேயர் இனப்பாகுபாடு மற்றும் இந்திய எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினர்.
2. அரசின் உயர் பதவிகளில் இந்தியர்களை நியமனம் செய்யாமல் விலக்கி வைத்தனர்.
3. குடிமைப் பணிக்கானத் தேர்வுகள் எழுத வயது வரம்பு 21 என நிர்ணயம் செய்யப்பட்டது.
4. ICS தேர்வில் இந்தியர்களின் வெற்றியைத் தடுக்க வயது வரம்பை 19 என குறைத்தனர்.
5. ICS தேர்வுகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்த அரசு

மறுத்தது.

**4. இந்திய தேசியக் காங்கிரஸின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினை விளக்குக.**

**இந்திய தேசியக் காங்கிரஸின் நோக்கங்கள்**

1. இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தில் இந்தியப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும்.
2. நிலவரியை குறைத்து ஜமீன்தார்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகள் பாதுகாத்தல்.
3. சுதேசிப் பொருட்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் இறக்குமதி வரியை உயர்த்துதல்.
4. ICS தேர்வுகளில் வெற்றி பெறுவதன் மூலம் நிர்வாகப் பணிகளை இந்திய மயமாக்குதல்.
5. ஆட்சி நிர்வாகத்தையும், நீதி நிர்வாகத்தையும் முற்றிலும் தனித்தனியாகப் பிரித்தல்.

**பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்களிப்புகள் :**

1. தாதாபாய் நௌரோஜி "செல்வச் சுரண்டல்" எனும் கோட்பாட்டை முன் வைத்தார்.
2. திலகர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என முழங்கினார்.
3. சுரேந்திரநாத் பானர்ஜி பெங்காலி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
4. திலகர் கேசரி, மராட்டா ஆகிய இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார்.
5. நௌரோஜி இந்தியாவின் குரல், ரஸ்ட்கோப்தார் ஆகிய பத்திரிகைகளை நடத்தினார்.

**5. இந்திய தேசிய இயக்கத்தில் லால் - பால் - பால் ஆகிய மூவரின் பங்களிப்பு**

**லாலா லஜபதி ராய் :**

1. 1916 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார்.
2. அரசுக்கு எதிரான பிரச்சாரம் செய்ததற்காக மாண்ட்லே சிறையில் அடைக்கப்பட்டார்.
3. சைமன் குழு எதிர்ப்பு போராட்டத்தின் போது போலிசாரின் தடியடியில் காயமடைந்தார்.

**பிபின் சந்திர பால் :**

1. மிதவாதியாக தனது வாழ்க்கையைத் தொடங்கி பின் தீவிர தேசியவாதியாக மாறினார்.
2. வங்காளத்தில் சுதேசி இயக்கத்தில் பங்கு கொண்டு முக்கிய பங்காற்றினார்.
3. அனல் பறக்கும் பேச்சுக்களால் தேசியவாதத்தை மூலை முடுக்கெல்லாம் பரப்பினார்.

**பால கங்காதர திலகர் :**

1. திலகர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என முழங்கினார்.
2. திலகர் கேசரி, மராட்டா ஆகிய இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார்.
3. 1916 ஆம் ஆண்டு ஏப்ரலில் பூனாவில் ஒரு தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார்.

**6. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் :**

1. திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் ஆதரவைப் பெற்றது.
2. அரசுக்கு எதிரான கூட்டங்களில் வட்டார மொழியில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.
3. 1907 இல் பிபின் சந்திர பால், சென்னையில் மெரினாக் கடற்கரையில் உரையாற்றினார்.

MFK, KJEMHSS

4. மாணவர்கள் வந்தே மாதரம் என்ற முழக்கத்துடன் ஐரோப்பியர்களை வாழ்த்தினார்கள்.
5. மெரினாக் கடற்கரையிலும் மூர் மார்க்கெட் வளாகத்திலும் கூட்டங்கள் நடைபெற்றன.
6. 1906 இல் வ.உ. சிதம்பரம் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை நிறுவினார்.
7. 1908 இல் கோரல் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
8. ஜி. சுப்ரமணியம் தி இந்து மற்றும் சுதேசமித்திரன் பத்திரிகைகளைத் தொடங்கினார்.
9.1908 இல் வ.உ.சி.யும், சிவாவும் திருநெல்வேலி கலவரத்தில் கைதாகி சிறை சென்றனர்.
10. திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.

**7. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் :**

1. நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.
2.மத்திய, மாகாண சட்ட மேலவையில் 4/5 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
3. மத்திய, மாகாண சட்டப் பேரவையில் 4/5 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்தல்.
4. நிர்வாக சபையில் 1/2 உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த இந்தியர்களாக இருக்க வேண்டும்.
5. மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க சம்மதித்தது.
6. இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்க ஒப்புக் கொண்டனர்.
7. தங்கள் சபைகளின் தீர்மானங்கள்படி மத்திய, மாகாண அரசுகள் செயல்பட வேண்டும்.
8. ஒரு தீர்மானம் ஓராண்டுக்குள் மீண்டும் நிறைவேற்றினால் அது செயல்பாட்டுக்கு வரும்.
9. ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழியமைத்தது.
10.அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்று இருக்க வேண்டும்.

**8. திலகர் மற்றும் அன்னி பெசண்ட் அம்மையார் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட சுயாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.**

**பாலகங்காதர திலகரின் சுயாட்சி இயக்கம் :**

1. 1916 ஏப்ரலில் பெல்காமில் நடந்த மாநாட்டில் திலகரின் சுயாட்சி இயக்கம் நிறுவப்பட்டது.
2. திலகரின் தன்னாட்சி இயக்கத்துக்கு மொத்தம் ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன. முக்கியக் கிளைகள் - மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா, மத்திய மாகாணங்கள்,பெரார்.
3. 1918 ஆம் ஆண்டு அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 32 ஆயிரமாக அதிகரித்தது.
4. தன்னாட்சி பற்றி பேசியதற்காக 1916 ஜூலை 23 இல் திலகர் கைது செய்யப்பட்டார்.

**அன்னி பெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கம் :**

1. 1916 செப்டம்பரில் அன்னி பெசண்ட் மதராஸில் சுயாட்சி இயக்கத்தைத் தொடங்கினார்.
2. முக்கியக் கிளைகள் - கான்பூர், அலகாபாத், பனாரஸ், மதுரா, காலிகட், அகமதுநகர்.
3. இந்தியா முழுவதும் தன்னாட்சி கருத்துக்களைப் பரப்புவதற்கு தீவர பிரச்சாரம் செய்தார்.
4. 1917 ஜூன் மாதம் அன்னி பெசண்ட் அம்மையார் ஊட்டி சிறையில் அடைக்கப்பட்டார்.
5. தன்னாட்சி இயக்கம் பிரபலமடைந்த பிறகு மதராஸ் அரசு அதனை அடக்க

MFK, KJEMHSS

நினைத்தது.

9. **மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் :**
1. மாப்பிள்ளை கிளர்ச்சி 1921 இல் ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக நடந்தது.
2. கிலாபத் இயக்கத்தின் தொடர்ச்சியாக மலபார் முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
3. வெளிநாட்டைச் சேர்ந்த நிலப்பிரபுக்களுக்கு எதிரான கிளர்ச்சியாகத் தொடங்கியது.
4. தங்கள் விவசாயத்தை அழித்த வெளிநாட்டினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர்.
5. பாதுகாப்புப் படையினர் மசூதியை உடைத்துச் சென்று மூன்று பேரைக் கைது செய்தனர்.

**மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் துயர விளைவுகள் :**
1. மாப்பிள்ளை கிளர்ச்சி இந்துக்களுக்கு எதிராக மாறி இந்துக்கள் பலர் கொல்லப்பட்டனர்.
2. இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர். பல கோயில்கள் இடிக்கப்பட்டன.
3. ஒத்துழையாமை இயக்கம் பாதிப்படைந்தது. இந்து - முஸ்லிம் ஒற்றுமை சீர்குலைத்தது.
4. 1922 ஜனவரியில் அரசு இராணுவத்தின் துணையோடு கிளர்ச்சியை முறியடித்தது.
5. 97 பேரை கைது செய்தனர். அதில் 40 பேர் ரயில் பெட்டியில் மூச்சடைத்து இறந்தனர்.

10. **ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்திய சூழல் :**
1. கிலாபத் மாநாட்டில், 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க முடிவு செய்தார்.
2. கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள் புறக்கணிப்பு திட்டம் அலகாபாத்தில் முடிவானது.
3. அரசுடன் ஒத்துழையாமைக் கடைபிடிப்பதென கல்கத்தாவில் தீர்மானம் இயற்றப்பட்டது.
4. அந்நியப் பொருட்களை புறக்கணித்தல், அரசு பட்டங்களை திரும்பித் தருதல் சேர்த்தனர்.
5. வரிக்கொடா இயக்கமும், சட்டமறுப்பு இயக்கமும் இதனுடன் இணைக்க முடிவு செய்தனர்.

**ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள் :**
1. உள்ளூர் மக்களால் பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வித்யா பீடங்கள் நிறுவப்பட்டன.
2. வழக்கறிஞர்கள், பள்ளி - கல்லூரி மாணவர்கள் அரசு நிறுவனங்களை புறக்கணித்தனர்.
3. 1921 இல் வேல்ஸ் இளவரசரின் இந்தியப் பயணம் மக்களால் புறக்கணிக்கப்பட்டது.
4. நாடு முழுவதும் விவசாயிகளும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
5. 1922 இல் சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் நடைபெற்றதால் பலர் கைதாயினர்.

11. **ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது**

**ஒத்துழையாமை இயக்கம் :**
1. 1920 இல் காங்கிரஸ் மற்றும் கிலாபத் இயக்கத்தின் ஆதரவோடு தொடங்கப்பட்டது.
2. இந்துக்கள் - முஸ்லிம்கள் இடையிலான ஒற்றுமை உணர்வை மேலும் வலுப்படுத்தியது.
3. அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றங்களை நாடு முழுவதும் புறக்கணித்தனர்.
4. அந்நியப் பொருட்களை புறக்கணித்தனர். அரசு பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தனர்.
5. வரிக்கொடா இயக்கமும், சட்டமறுப்பு இயக்கமும் இதனுடன் இணைக்க முடிவு செய்தனர்.

**சட்டமறுப்பு இயக்கம் :**
1. 1930 இல் சட்டமறுப்பு இயக்கத்தை காந்தியடிகள் முறைப்படித் தொடங்கி வைத்தார்.
2. சட்டங்களை மீறுவதும், அரசுக்கு வரிகள் செலுத்தாமல் புறக்கணிப்பதும்

நடைபெற்றன.

3. அனைத்து பிரிவு மக்களும் பயன்படுத்தும் உப்பு மீதான வாரியை நீக்குமாறு கோரினார்.
4. 1930 இல் காந்தியடிகள் தண்டி யாத்திரை மேற்கொண்டு சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.
5. அரசின் வன்முறை தாக்குதல்களால் 1934 இல் சட்டமறுப்பு இயக்கம் முடிவுக்கு வந்தது.

**12. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியின் பங்கு :**

1. 1919 இல் கிலாபத் இயக்கத்தை ஆதரித்ததோடு அதன் மாநாட்டுகளிலும் பங்கேற்றார்.
2. 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை இந்து - முஸ்லிம் ஆதரவோடு தொடங்கினார்.
3. பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைத்தார்.
4. 1922 இல் செளரி செளரா சம்பவத்தால் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.
5. 1930 இல் சட்டங்களை மீறுவதன் மூலம் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.
6. 1930 இல் 375 கி.மீ. தூரம் தண்டி யாத்திரை சென்று சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.
7. 1931 இல் காந்தி - இர்வின் ஒப்பந்தம்படி இந்தியர்களை சிறையில் இருந்து விடுவித்தனர்.
8. 1931 இல் லண்டனில் 2-வது வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் சார்பாக பங்கேற்றார்.
9. வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடுகளை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்.
10. 1932 இல் எரவாடா சிறையில் அம்பேத்கருடன் பூனா ஒப்பந்தம் செய்து கொண்டார்.

**13. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு சமூக நீதியை பாதுகாக்க டாக்டர். அம்பேத்கர் கவனம் செலுத்திய கல்வி முறை :**

1. கல்வி மூலமே ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சமூக அந்தஸ்த்தை அடைய முடியும் என்றார்.
2. சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலைநாட்ட கல்வி அவசியம் எனக் கருதினார்.
3. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு கல்வி அளிக்க வேண்டுமென கடுமையாக போராடினார்.
4. சாதி மற்றும் பாலின வேறுபாடின்றி சமமான கல்வி வாய்ப்புகள் உருவாக்கிட கோரினார்.
5. தீண்டாமையை ஒழிக்க அனைத்து சாதியினரும் ஒரே வகுப்பறை அமரவேண்டும் என்றார்.
6. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை வழங்கக் கோரினார்.
7. சுதந்திரம், சமத்துவம், சகிப்புத் தன்மை ஆகியவற்றை கற்பிக்க வேண்டுமென கூறினார்.
8. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கென தனியாக கல்விக் கூடங்கள் தொடங்க ஊக்குவித்தார்.
9. சமூக நீதியை பாதுகாக்க கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு அமல்படுத்தினார்.
10. இலவசக் கல்வி, கல்வி உதவித்தொகை, இலவச தங்கும் விடுதிகள் வழங்க பாடுபட்டார்.

**************

MEK,KJEMHSS